# பட்டயம்

மலர் – 08 பிப்ரவரி – 2012 இதழ் – 4

Date of Issue : 01-02-2012

Place of Publication : 86 / 222H, Main Road,
Panagudi - 627 109.
Tirunelveli District, Tamil Nadu.

Volume : 8

Issue : 4 Price Per Copy : Rs.5.00

## ஜெப மலர்




## ஓசன்னா ஆலய வெளியீடு

www.hosannahchurch.in

"இந்த ஆலயத்தை மகிமையினால் நிறையப் பண்ணுவேன்" (ஆகாய்2:7)

## ஆசிரியர் கடிதம்

**சூரியனுக்குக் கீழே மனுஷன் படுகிற எல்லாப் பிரயாசத்தினாலும் அவனுக்குப் பலன் என்ன? (பிரசங்கி 1/3; 2/22)**

தேவன் நம் கைப்பிரயாசங்களைக் கவனித்துப் பார்க்கிறார். நாம் என்னென்ன கிரியைகளைச் செய்கிறோம், எதற்காகப் பிரயாசப்பட்டு உழைக்கிறோம், எதற்காக கவலைப்பட்டு நாள் முழுதும் பிரயாசப் படுகிறோம் என்பதை கவனிக்கிறார். மனிதன் பிரயாசப்பட்டு உழைத்து தன் கண்களுக்குப் பிரியமானதையெல்லாம் பார்க்க விரும்புகிறான், அனுபவிக்க விரும்புகிறான். எல்லாவற்றையும் அனுபவிக்கவே பிறந்திருக்கிறேன் என ஒருவன் சொல்லலாம். ஆனால் கர்த்தரின் வார்த்தை இவ்விதம் கூறுகிறது ‘‘காண்கிறதினால் கண் திருப்தியாகிறதில்லை; கேட்கிறதினால் செவி நிரப்பப்படுகிறதுமில்லை’’ (பிரசங்கி 1/8). அற்ப சந்தோஷத்திற்காக ஏசாவைப் போல கர்த்தருக்கடுத்த காரியங்களை மனிதன் அசட்டை பண்ணுகிறான்.

மனிதன் படும் சகலப் பிரயாசத்தின் பலனையும் அனுபவிப்பது தேவனுடைய அநுக்கிரகம் தான் (பிர. 3/13). ஆனால் கர்த்தருடைய பிள்ளைகள் உலக சிநேகமுள்ளவர்களைப் போல எல்லாவற்றையும் அனுபவிக்க விரும்பக் கூடாது. எல்லாவற்றையும் அனுபவிக்க எனக்கு அதிகாரமுண்டு; ஆகிலும் எல்லாம் தகுதியாயிராது (Iகொ 6/12). தகுதியானவைகளை மட்டும் அனுபவியுங்கள். இதற்கும் கர்த்தரின் அனுக்கிரகம் தேவை (Iதீ 2/9,10). தகுதியான இடங்கள், தகுதியான வசதிகள், தகுதியான ஐக்கியங்கள், தகுதியான உணவுகள், தகுதியான ஆடைகள் இவைகளை மட்டுமே அனுபவியுங்கள். இது நவீன காலம் என சொல்பாவத்தை அனுபவியாதிருங்கள். கர்த்தரின் வேதம் தவறு என சொல்பவற்றைச் செய்யாதிருங்கள். நீங்கள் படுகிற பிரயாசங்கள் பலனில்லாமல், வீணாய் போகாதபடி உங்களைச் சரிசெய்து கொள்ளுங்கள். நீ எதை செய்தாலும் அதை கர்த்தர் கரத்தில் ஒப்புவித்து செய்யத் தொடங்குவாயானால் உன் பிரயாசங்களை வாய்க்கச் செய்வார் (சங். 127/1). முதலாவது நீ செய்கிற காரியங்கள் கர்த்தருக்குப் பிரியமானதா, கர்த்தருக்கு சித்தமானதா என்பதைச் சோதித்துப் பார்த்து ஆரம்பி. உன் விருப்பபடி செய்யாதே (நீதி. 3/5,6)

உன் கைகளின் பிரயாசத்தை நீ சாப்பிடுவாய், உனக்குப் பாக்கியமும் நன்மையும் உண்டாயிருக்கும் (சங். 128/1). உன் உழைப்பினால் உனக்கு நிறைவும், திருப்தியும், சந்தோஷமும் வருகிறதா? உன் தேவைகள் சந்திக்கப்படுகிறதா? இல்லையென்றால் உன்னிடம் ஏதோ தவறு இருக்கிறது. கர்த்தரிடம் முறுமுறுக்காதே. அவர் எப்போதும் நல்லவராகவே இருக்கிறார். நாம் தான் தவறுகிறோம்.

நீதிமானுடைய பிரயாசம் ஜீவனைப் பிறப்பிக்கும் என நீதி 10/16ல் வாசிக்கிறோம். உன் பிரயாசத்தின் மூலம் அநேகர் நித்திய ஜீவனைப் பெற வேண்டும் என தேவன் விரும்புகிறார். சகல பிரயாசத்தினாலும் பிரயோஜனமுண்டு என நீதி 14/23ல் பார்க்கிறோம். வாழ்வில் திருப்தி செய்யாத பொருளுக்காக உங்கள் பிரயாசத்தையும், பணத்தையும் செலவழித்து முடிவில் வெறுங்கையோடு நேசரை சந்திக்க போகிறீர்களா? (ஏசா 55/2) அல்லது கர்த்தருக்காகப் பிரயாசப்பட்டு நல்ல போராட்டத்தைப் போராடி ஓட்டத்தை ஜெயமுடன் முடிக்கப் போகிறீர்களா? (IIகொரி 11/23; II தீ. 4/7)

கர்த்தருக்குள் பவுலோடு கூட பிரயாசப்பட்டவர்களின் பெயர்களை ரோமர் 16ல் வாசிக்கிறோம். உலகத்துக்கடுத்த காரியங்களுக்காக பிரயாசப்படுவது இந்த உலகத்தின் தேவைகள் சந்திக்கப்படுவதற்காக மட்டுமே. நித்திய ஜீவனுக்கும் அதற்கும் சம்பந்தம் இல்லை. கர்த்தருக்குள் நீங்கள் படுகிற பிரயாசம் விருதாவாக இராது, பலன் உண்டு. நீங்கள் பிறருக்காக ஜெபிப்பது, ஊழியங்களை ஜெபத்தாலும் பொருளாலும் தாங்குவது, ஏழைகளுக்கு இரங்குவது, ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணுவது, இரவில் விழித்திருந்து ஜாமக்காரர்களாக ஜெபிப்பது இவை எல்லாவற்றிற்கும் இம்மையிலும் மறுமையிலும் பிரதிபலன் உண்டு. ஆகவே கர்த்தருக்காகப் படுகிற பிரயாசங்களில் உறுதியுள்ளவர்களாயும், அசையாதவர்களாயும், கர்த்தருடைய கிரியையிலே எப்பொழுதும் பெருகுங்கள். (Iகொரி 15/58).

பிரயாசப்பட்டுப் பயிரிடுகிறவன் பலனில் முந்திப் பங்கடைய வேண்டும் (IIதீ 2/6). உங்கள் கிரியையையும், நீங்கள் பரிசுத்தவான்களுக்கு ஊழியஞ்செய்ததினாலும் செய்து வருகிற தினாலும் தமது நாமத்திற்காகக் காண்பித்த அன்புள்ள பிரயாசத்தையும் மறந்து விடுகிறதற்கும் தேவன் அநீதியுள்ளவரல்ல (எபி.6/10)

கிறிஸ்துவின் வருகையின் நாளிலே நீங்கள் மகிழ்ச்சியோடு அவரை வரவேற்பீர்கள் (பிலி2/14-16). பரலோகத்தில் உங்கள் பலன் மிகுதியாயிருக்கும். கர்த்தர் தாமே இவ்வாண்டில் அவருக்காக அதிகமாகப் பிரயாசப்பட நமக்கு உதவி செய்வராக. (ஆமென்)

ù_TeLs (ùRôPof£)

**41. என்னை சபைக்குட்படுத்தும் தேவனாய் வாரும் (வெளி. 12)**

1. கர்த்தாவே! உம்மை நேசிக்கும் மணவாட்டியாக்கும்
2. கர்த்தாவே! நீதியின் சூரியனாக உம்மை அணிந்து துர்இச்சைகளுக்கு விலகியிருப்பேனாக.

3. கர்த்தாவே! என் பாதங்களின் கீழ் சாத்தான் இருப்பதாக. அவன் மேல் நடக்க, அவனை மிதிக்க, அவனை மேற்கொள்ள உதவி செய்யும்.
4. கர்த்தாவே! 12 கிரீடங்கள் தாரும். விசேஷமாக அபிஷேக கிரீடம், உம் இரத்த ஜீவகிரீடம் எனக்கு இருப்பதாக.
5. கர்த்தாவே! உம்மை எனக்குள் தரித்தவனாக்கும்.
6. ஆத்தும பாரம் தாரும்.
7. அழுது ஜெபிப்பவனாக்கும்.
8. ஆளுகை உள்ளவனாக மாற்றும். ராஜாவாக மாற்றும். ஆண்பிள்ளையாக மாற்றும்.
9. உம் கூடாரத்தில் உம் சிங்காசனத்திற்கு என் ஜெபம் கிட்டிச் சேர்வதாக.
10. வனாந்தர சோதனைகள் வந்தாலும் உம்மால் போஷிக்கப்படு வேனாக.
11. கர்த்தாவே! பிசாசின் மேல் முழுஜெயம் எடுப்பவனாக்கும். உம் இரத்தத்தால், சாட்சியால், வசனத்தால் வெற்றி உண்டாவதாக.
12. உம் வருகைக்குப் பங்காளியாக்கும்.
13. யூதர்களின் கண்கள் திறக்கப்படுவதாக.

**42. சாத்தான் மேல் ஜெயம் தரும் தேவனாய் வாரும்**

1. கர்த்தாவே! பிசாசின் தலையை நசுக்குவீர் என்ற விசுவாசம் உள்ளவனாக என்னை மாற்றும். உம் நாமத்தினால் சாத்தான் மேல் வெற்றி உண்டு என்பதை விசுவாசிக்கப்பண்ணும்.
2. கர்த்தாவே! உம் இரத்தம், இரத்தத்தின் ஜீவன் சாத்தானை மேற்கொள்ளும் என்பதை விசுவாசிப்பவனாக்கும்.
3. கர்த்தாவே! பிசாசுக்குக் கீழ்படியாது இருப்பேனாக.
4. பிசாசுக்கு எதிர்த்து நிற்பேனாக.
5. கர்த்தாவே! பிசாசுடன் ஐக்கியம் கொள்ளாதிருப்பேனாக
6. கர்த்தாவே! பிசாசின் ஆலோசனைகளுக்கும் சத்தத்திற்கும் செவி கொடாதிருப்பேனாக.
7. கர்த்தாவே! பிசாசின் சோதனைகளிலே சிக்கிக் கொள்ளாதபடிக்கு கவனமாய் இருப்பேனாக.
8. கர்த்தாவே! பிசாசின் இச்சைகளில் சிக்காதபடிக்கு எச்சரிக்கை யாயிருப்பேனாக.
9. கர்த்தாவே! பிசாசுக்கு எதிர்த்து நிற்பேனாக.
10. கர்த்தாவே! விழிப்புள்ளவனாக, பிசாசின் தந்திரங்களில் சிக்கிவிடாதவனாக என்னைக் காத்துக்கொள்ளும்.

11. கர்த்தாவே! விழித்திருந்து ஜெபித்து கிருபைமேல் கிருபை பெற்று சாத்தான் மேல் ஜெயம் எடுப்பவனாக மாற்றும்.

## 43. நிரப்பும் தேவனாய் வாரும், கர்த்தாவே!

1. கர்த்தாவே! வெறுமையாயிருந்த பூமியை வெளிச்சம், காற்று, கடல், வெட்டாந்தரை, தாவரங்கள், மச்சங்கள், பறவைகள், ஊர்வன, மிருகங்கள், மனிதர்கள் போன்றவற்றால் நிரப்பினவரே! வெறும் பாத்திரமாயிருக்கிற என்னை ஆசீர்வதித்து எல்லா நன்மைகளையும் கொடுத்தருளும்.
2. கர்த்தாவே! கானாவூர் கல்யாண வீட்டில் குறைவு வந்த வேளையிலே தண்ணீரை சுவையுள்ள இரசமாக மாற்றி குறைவை நிரப்பியவரே! எங்கள் காரியங்களில் உள்ள எல்லாப் பற்றாக் குறைவுகளையும் நிறைவாக்கும். அதை மேன்மையானதாகவும் தாரும்.
3. கர்த்தாவே! இரவு முழுவதும் பிரயாசப்பட்டும் ஒன்றும் அகப்படாத கட்டத்தில் உம்முடைய கிருபையினால் வலை கிழியத்தக்க அளவில் மீன்களைப் பிடித்தார்களே! உம் கிருபையால் திரளான ஆத்துமாக்கள் கிடைப்பதாக. (லூக்கா. 5/5)
4. கர்த்தாவே! புசிக்கிறதற்கு ஒன்றும் இல்லாத கட்டத்திலே உமது கிருபையினால் 153 பெரிய மீன்களைப் பிடித்தார்களே! உம் கிருபையினால் சபையைத் தாங்கும் ஆத்துமாக்கள் கிடைப்பதாக (யோ. 21)
5. கிட்டத்தட்ட வெறுமையாயிருந்த விதவை வீட்டில் எண்ணையும் மாவும் குறையாதிருக்கப் பண்ணினவரே! அதிசயம் செய்து நிரப்பும். (Iராஜா 17/14).

## 44. அன்பில் பெருகப்பண்ணும்

1. கர்த்தாவே! உம்மை நேசிக்கிற நேசத்தில் நாள்தோறும் வளரப்பண்ணும். உம்மேல் தாகம் கொள்வேனாக. உம்மை எனக்கு முன் விசுவாசத்தினால் நிறுத்தி நோக்குவேனாக. கர்த்தாவே! உம்முடைய வீட்டைக்குறித்த பக்தி வைராக்கியம் என்னை பட்சிப்பதாக. மானானது நீரோடைகளை வாஞ்சித்துக் கதறுவது போல என் ஆத்துமா உம்மை வாஞ்சித்துக் கதறுவதாக. கர்த்தாவே! உம் நாமத்துக்காக எதையும் இழக்கவும் எதையும் சகிக்கவும் ஜீவனையும் இழக்கவும் ஆயத்தமுள்ளவனாக மாற்றும்.
2. கர்த்தாவே! மனுஷர்களை நேசிக்கின்ற நேசத்திலும் வளரப்பண்ணும். என் சத்துருவாக இருந்தாலும் அவர்களை என் வார்த்தையால்

சபிக்காதவனாகவும், திட்டாதவனாகவும், அவமானப்படுத்தாத வனாகவும் என்னை மாற்றும் கர்த்தாவே! என் சத்துருக்கள் தண்டிக்கப்படும் வேளையிலே அதனிமித்தம் களி கூராதிருப்பேனாக. என் சத்துருவாய் இருந்தாலும் அவன் மனந்திரும்பும்படியாக ஜெபிப்பவனாக மாற்றும்.

## 45. பிரச்சனைகளில் இவ்வாறு செயல்படாதிருப்பேனாக

1. பிரச்சனைகள் வரும்போது அவைகள் மேல் ஜெயம் பெற யோசிக்காமல் மரக்கட்டை போல இருக்காதிருப்பேனாக.
2. பிரச்சனைகள் வரும் போது எல்லாம் தலையெழுத்துப்படியே நடக்கிறது என்று சொல்லிகொண்டு சும்மா இருக்காதிருப்பேனாக.
3. பிரச்சனைகள் வரும் போது என்னையே நொந்து கொண்டு தற்கொலை செய்யாதிருப்பேனாக.
4. பிரச்சனைகள் வரும் போது அவைகளை மறப்பதற்கென்று போதை வஸ்துக்களில் சிக்கிக் கொள்ளாதிருப்பேனாக.
5. பிரச்சனைகள் வந்தவிட்டதென்று ஒருவருக்கும் அறிவிக்காமல் எல்லாரையும் விட்டுவிட்டு எங்கோ ஓடிப்போய் விடாதிருப்பேனாக.
6. பிரச்சனைகள் வரும் போது ஆண்டவர் நல்லவரல்ல என்று எண்ணி முறுமுறுக்காதிருப்பேனாக
7. பிரச்சனைகள் வரும் போது அவைகளுக்கு மற்றவர்களே காரணம் என்று பகைத்தும் சண்டையிட்டுக் கொண்டும் இராதிருப்பேனாக.
8. பிரச்சனைகள் வரும் போது மனுஷர்களே தஞ்சம் என்றெண்ணி அவர்களை மட்டும் சார்ந்து உம்மை மறந்து விடாதிருப்பேனாக.
9. பிரச்சனைகள் வரும் போது உம் பாதம் விழுந்து அவைகள் தீர உம்மூலமே வழிகள் திறக்கப்பட ஜெபிப்பேனாக.

## 46. பிரச்சனைகள் தீர நீரே வழிகளைத் திறந்தருளும்

1. கர்த்தாவே! எந்த சோதனை அல்லது வேதனை அல்லது பிரச்சனை என் வாழ்வில் வந்தாலும் அந்தப் பிரச்சனை தீர்வதற்கென்று உம்மிடம் கடந்து வருபவனாக என்னை மாற்றும்.
2. கர்த்தாவே! வியாதி வரும் வேளையிலே முதலாவது அக்காரியத்தை உம்மிடம் சொல்பவனாக மாற்றும்.
3. கர்த்தாவே! எந்தப் பிரச்சனையாயிருந்தாலும் அதை முதலாவது உம்மிடம் சமர்ப்பிக்கும் போது அது தீரும்படி நீரே எமக்கு நல்வழி திறப்பீர் என்பதை விசுவாசிப்பவனாக்கும்.
4. கர்த்தாவே! பிரச்சனை வேளைகளில் இன்னும் உம்மை அண்டிக் கொள்பவனாக்கும்.

5. கர்த்தாவே! என் பிரச்சனை, குடும்ப பிரச்சனை, பிள்ளைகளின் பிரச்சனை, பெற்றோரின் பிரச்சனை, சபையாரின் பிரச்சனை, ஊழிய சம்பந்தப் பிரச்சனை எல்லாம் முற்றும் அறிந்தவரே! அவைகள் எல்லாம் தீர நீர் வழிகள் திறப்பீர் என்று விசுவாசித்து உம் மண்டை சமர்ப்பிக்கிறேன். நீரே எமக்குத் தீர்வு உண்டாகத்தக்கதாக நல்ல வழிகளைத் திறந்து நன்மை செய்யும். ஆமென்.

## 47. 12 விதமான ஈவுகள் கிடைப்பதாக (ஏசாயா. 9/6)

1. கர்த்தரின் ஆளுகையினால் எல்லாக் காரியங்களிலும் வெற்றி உண்டாவதாக.
2. கர்த்தரின் ஆலோசனை, கர்த்தரின் வழிகாட்டல், கர்த்தரின் நடத்தல் எல்லாக் காரியங்களிலும் கிடைப்பதாக.
3. கர்த்தரின் எண்ணி முடியாத அதிசயங்கள், ஆராய்ந்து முடியாத பெரியகாரியங்கள் கையிட்டுச் செய்யும் கர்த்தருக்கு சித்தமான எல்லாவற்றிலும் நடப்பதாக.
4. கர்த்தரின் வல்லமை (முழு) எம்மோடிருப்பதால் மற்ற எந்த வல்லமையாலும் தேவசித்தம் தடைபடாதிருப்பதாக.
5. கர்த்தரின் நித்திய ஆசீர்வாதங்கள் எல்லாவற்றிலும் பங்கு கிடைப்பதாக.
6. கர்த்தரின் சமாதானம் உள்ளத்திலும். இல்லத்திலும், வேலை ஸ்தலத்திலும், சபையிலும், சங்கத்திலும், சுற்றிலும் நதியளவு பாய்வதாக.
7. சுய தேவை, குடும்பதேவை, சமுதாய பணி தேவை, கர்த்தரின் பணிக்கடுத்த தேவை, திடீர் தேவை, வருங்கால வைப்புத் தேவை, தரித்திரருக்கடுத்த தேவை, பெற்றோருக்கடுத்த தேவை யாவும் பிரபுவால் சந்திக்கப்படுவதாக.
8. கர்த்தரால் வரும் திடன் வருவதாக.
9. கர்த்தரால் வரும் நியாயம் வருவதாக.
10. எல்லாநீதிகளையும் நிறைவேற்ற பாக்கியம் கிடைப்பதாக.
11. சகல காரியங்களிலும் நிலைப்படுத்தப்படல் கிடைப்பதாக.
12. ஜீவ அப்பத்தால் ஆத்துமாவில் சந்தோஷம், இளைப்பாறுதல் கிடைப்பதாக..

## 48. சாபங்களினின்று விடுவிக்கும் தேவனாய் வெளிப்படும்

1. கர்த்தாவே! உம்மை நோக்கித் திரும்புகிறேன். அவர்கள் துன்பம் உண்டாகப் பிள்ளைகளைப் பெறுவதுமில்லை என்ற வாக்குத்தத்தம் எம் வாழ்வில் நிறைவேறுவதாக. (ஏசாயா. 65/23)

2. என் ஆசை உம்மையே பற்றியிருப்பதாக (சங் 73/25)
3. நீரே என்னை ஆண்டு கொள்ளும் (சங். 45/11)
4. கையிட்டு செய்யும் எல்லா வேலைகளிலும் எனக்கு ஆசீர்வாதம் கட்டளையிட்டருளும். (உபா. 28/8)
5. என் களஞ்சியங்களிலும் எனக்கு ஆசீர் கட்டளையிட்டருளும் (உபா. 28/8)
6. கர்த்தாவே! நான் செய்வதெல்லாம் வாய்ப்பதாக (சங். 1/3)
7. கர்த்தாவே! அப்பத்தையும் தண்ணீரையும் ஆசீர்வதித்து வியாதியை என்னை விட்டு விலக்கும். (யாத் 23/25)
8. கர்த்தாவே! என் பாவங்கள் நிமித்தம் வரும் சாபங்கள் எல்லாவற்றையும் உம் சாபங்கள் எல்லாவற்றையும் உம் கிருபையால் உம் இரத்தத்தால் அகற்றி பாவசாபத்தினின்று விடுதலை தாரும்.
9. கர்த்தாவே! எமக்காய் சாபமானவரே! பிந்தின ஆதாமாகிய நீர் என் கீழ்படியாமையினிமித்தம் வந்த எல்லா சாபங்களையும் மாற்றி ஆசீர்வதியும் (கலா.3/13)
10. பரலோகத்தில் பொக்கிஷம் அதிகமாக சேர்க்கத்தக்கதாக எம்மை ஆசீர்வதியும். (மத். 6/2)

## 49. இணைக்கும் தேவனாய் வெளிப்படும்

1. கர்த்தாவே! ஆதாமுக்கு ஏற்ற துணையாய் ஏவாளைக் கொடுத்தீரே! அதைப்போல மனுஷ தயவு பெருகப் பண்ணும். இருவர் பிரயாசத்தினால் அதிக பலன் உண்டாகத்தக்கதாக ஆசீர்வதியும். (பிரசங்கி 4/9)
2. கர்த்தாவே! குடும்பங்களில் புருஷனும் மனைவியும் இசைந்தவர் களாய் ஒரு மனப்பட்டவர்களாய் செயல்படுவார்களாக. (ஆதி 2/24)
3. கர்த்தாவே! புருஷன் மனைவியைத் தன்னைப் போல் நேசிப்பானாக. மனைவியானவள் புருஷனைத் தன்னைப் போல நேசிப்பாளாக. பெற்றோர்கள் பிள்ளைகளைத் தங்களைப் போல நேசிப்பார்களாக. (எபேசி. 5/28)
4. கர்த்தர் தாமே இரட்சிக்கப்பட்ட புருஷனுக்கு இரட்சிக்கப்பட்ட சகோதரியை திருமணத்தில் கரம்பிடித்து இணைப்பாராக (ஆதி. 24/4)
5. கர்த்தர் திருமணத்தில் இணைத்ததை சாத்தானோ பொல்லாதவர் களோ பிரிக்க முடியாமல் போவதாக. (மத் 19/6)
6. குடும்பத்துக்குள் போராடும் எல்லாவிதமான பிரிவினை ஆவிகள், சந்தேக ஆவிகள், அவிசுவாச ஆவிகள் கர்த்தரால் கட்டிப் போடப்படுவதாக. (மத் 19/6)

## 50. ஆசீர்வதிக்கும் தேவனாய் வாரும்

1. மச்சங்களையும், பறவைகளையும் ஆசீர்வதித்தீரே! நாங்கள் புசிக்கத்தக்க மச்சங்களையும் பறவைகளையும் எமக்கு ஆசீர்வதித்துத் தந்தருளும். (ஆதி. 1/21)
2. கர்த்தாவே! ஆதாமையும் ஏவாளையும் பூமியை நிரப்பும்படியாய் ஆசீர்வதித்தீரே! ஆவிக்குரிய சந்ததியாரால் பூமியை நிரப்பத்தக்கதாக அடியார்களை ஆசீர்வதியும் (ஆதி 1/28)
3. கர்த்தாவே! மச்சங்கள், பறவைகள், மிருகங்களை ஆண்டு கொள்ளுங்கள் என்று ஆசீர்வதித்தீரே! எந்த ஜீவ ஜந்துவாலும் சேதமோ, கொள்ளை நோயோ எமக்கு வராதபடி ஆசீர்வதியும் (ஆதி 1/28)
4. ஏழாம் நாளை ஆசீர்வதித்து அதைப் பரிசுத்தமாக்கினீரே! உம் ஆசீர் எங்கள் சபை கூடும் நாளில் 7 மடங்காய் கடந்து வருவதாக. (ஆதி 2/3)
5. கர்த்தாவே! மற்றவர்களுக்கும் பிரயோஜனமுள்ளவனாக இருக்கத் தக்கதாக என்னை ஆசீர்வதித்து ஆசீர்வாதமாய் மாற்றும். (ஆதி. 12/3)
6. கர்த்தாவே! ஏதேன் தோட்டமாய் எம் சபையை ஆசீர்வதியும். தண்ணீராக ஆவியின் நிறைவு இருப்பதாக. அநேக கனிகள் கொடுக்கத்தக்கதாக ஆசீர்வதியும் (ஆதி.2)

## 51. உற்சாகமுள்ளவனாக மாற்றும்

1. கர்த்தாவே! உமது இரட்சணியத்தின் சந்தோஷத்தைத் திரும்பவும் எனக்குத் தந்து உற்சாகமான ஆவி என்னைத் தாங்கும்படி செய்யும் (சங்கீதம் 51/13). கர்த்தாவே! இரட்சிப்பின் பாத்திரத்தை எடுத்துக் கொண்டு உற்சாகமாக உம்மை ஸ்தோத்திரிக்கப் பண்ணும்.
2. கர்த்தாவே! கைகளினால் உற்சாகத்தோடே வேலைகளை, கடமைகளை ஊழியங்களைச் செய்பவனாக மாற்றும் (நீதிமொழிகள் 31/13)
3. கர்த்தாவே! உற்சாகமாகக் கொடுப்பவனாக மாற்றும். ஏழைகளுக்கும், திக்கற்றவர்களுக்கும், உற்சாகமாகக் கொடுக்கும் நல்ல மனம் தாரும். (II கொரி 9/7)
4. கர்த்தாவே! ஆத்தும ஆதாயப் பணிகளுக்காக உற்சாகமாகக் கொடுப்பவனாக மாற்றும். (II கொரி 9/7,10)
5. கர்த்தாவே! தசம பாகங்களையும் காணிக்கைகளையும் உற்சாகமாகக் கொடுப்பவனாக்கும். (மல்கியா 3/8)
6. கர்த்தாவே! இராயனுக்குரியதை இராயனுக்கு உற்சாகமாகக் கொடுப்பவனாக்கும். (                )
7. இல்லாதவர்களுக்கு (ஞானம், அறிவு, பெலன், பொருள், பணம், ஒத்தாசை, ஆதரவு) என் பங்கை உற்சாகமாய் கொடுக்க உதவி செய்யும். (                )

## 52. விழிப்புள்ளவனாக்கும்

1. கர்த்தாவே! உமது வாசல்படியில் நித்தம் விழித்திருந்து, உம் கதவு நிலையருகே காத்திருந்து உமக்கு செவிகொடுப்பவர்களாக மாற்றும் (நீதி 8/34)
2. கர்த்தாவே! சோதனைகளில் விழுந்து விடாதபடிக்கு விழித்திருந்து ஜெபிக்கிற நல்ல மணவாட்டிகளாக மாற்றும். ஜெபத்தில் விழிப்புள்ள வர்களாக மாற்றும். (மத் 6/41)
3. கர்த்தாவே! எங்கள் எதிராளியான பிசாசானவன் எவனை விழுங்கலாம் என்று சுற்றித் திரிகிற வேளையில் அவன் கண்ணிகளிலும் தந்திரங்களிலும் சிக்கிக் கொள்ளாதபடியாக விழிப்புள்ளவனாக எம்மை மாற்றும். (I பேதுரு 5/8)
4. கர்த்தாவே! நீர் இன்ன நாழிகையிலே வருவீரென்பதை அறியாதிருக் கிறபடியினால் ஆயத்தமாய் இருக்கப் பண்ணும்; விழிப்பாயிருக்கப் பண்ணும் (மத் 25/42,44)

## 53. ஜெபங்களுக்கு பதில் உண்டாவதாக

1. பரிசுத்தவான்களின் ஜெபங்களும், துதி, ஸ்தோத்திரங்களும் தூதனுடைய கையிருந்து தேவனுக்கு முன்பாக எழும்புவதாக. (வெளி 8/4).
2. கர்த்தாவே! எமக்கு நீர் கொடுத்திருக்கின்ற ஏறுகிற தூதர்கள் மூலமாக ஜெபங்கள், ஸ்தோத்திரங்கள், துதிகள் யாவும் உம்மண்டை வந்தடைவதாக (யோவான் 1/51)
3. ஜெபம் உட்பிரவேசியாதபடியாக தடைபண்ணும் வானமண்டலப் பொல்லா ஆவிகள் யாவும் உம் வலக்கரத்தால் கட்டிப் போடப்படுவதாக (புலம்பல் 3/44).
4. கர்த்தாவே! வானம் திறக்கப்படுவதாக. பரிசுத்தவான்களின் ஜெபங்கள் யாவும் தேவனுக்கு முன் எழும்புவதாக (லூக். 3/21).
5. கர்த்தாவே! வானம் திறக்கப்படுவதனால் பரிசுத்த ஆவியின் வல்லமை இறங்குவதாக. கர்த்தாவே! பிதாவின் சத்தம் கேட்பதாக. (லூக். 3/21)
6. கர்த்தாவே! இறங்குகிற தூதர்கள் மூலமாக ஜெபத்திற்கு பதில், ஈவுகள், ஜெபத்திற்கு தக்க ஒத்தாசை, ஞானம், வரம் உன்னதத்திருந்து இறங்கி வருவதாக (யாக்கோபு 1/17)

## 54. பேசும் ஞானம் தாரும்

1. கர்த்தாவே! மெதுவான பிரதியுத்திரம் உக்கிரத்தை மாற்றும். கடுஞ்சொற்களோ கோபத்தை எழுப்பும் என்றவரே! Soft Answer பண்ண உதவிடும் (நீதி 15/1)

2. கர்த்தாவே! மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி உத்தரவு கொடாதே என்றவரே! வாய் திறந்தாலும் குற்றப்படுத்துவார்கள் என்ற தருணத்தில் (நீதி 26/4) மௌனமாய் இருக்கச் செய்யும் (ஏசாயா 53/7).
3. நலமானதையும் பேசாமல் அமர்ந்திருக்க வேண்டிய நேரத்தில் அமர்ந்திருக்கச் செய்யும் (சங் 39/2).
4. கர்த்தாவே! துன்மார்க்கன் எனக்கு முன்பாக இருக்குமட்டும் என் வாயைக் கடிவாளத்தில் அடக்கி வைப்பவனாக்கும். தர்க்கத்திற்கு இடம் கொடாதவனாக என்னைக் காத்திடும். (சங் 39/1)
5. கர்த்தாவே! பன்றிகளின் முன் முத்துக்களைப் போடாதே என்றவரே! சத்தியத்தை அறிந்து பின்வாங்கிப் போனவர்களிடம் தாக்கத்திற்கு இடம் கொடாதவனாக மாற்றும். (மத்)
6. கர்த்தாவே! மூடனுக்கு அவன் மதியீனத்தின்படி மறுஉத்தரவு கொடு என்றவரே! ஸ்தேவான் பேசின ஞானத்தையும், ஆவியையும் எதிர்த்து நிற்க கூடாமல் போனதுபோல் உம் ஞானத்தால் மேற்கொள்ள உதவிடும் (அப் 6/10)

**55. மரியாள் மேல் வந்த ஆசீர் என்மேல் வருவதாக.**

1. கர்த்தாவே! உம்மால் வாழ்பவனாக என்னை மாற்றும். உம் ஜீவன், பரிபூரண ஜீவன், நித்திய ஜீவன் பெற்றவனாக்கும் (லூக். 1/28)
2. கர்த்தாவே! உம் கிருபை மேல் கிருபை பெற்று நிர்மூலமாகாதவனாக என்னைக் காத்திடும் (லூக். 1/28)
3. கர்த்தாவே! என்னோடும் நான் செய்யும் எல்லா வேலைகளிலும் கூடவே இருந்து என்னைத் தாங்கிக் கொள்ளும். (லூக். 1/28)
4. கர்த்தாவே! உம் மணவாட்டிகளுக்குள்ளே விசேஷமாக ஆசீர்வதிக்கப்பட்ட மணவாட்டியாயிருப்பேனாக. (லூக். 1/28)
5. எல்லாவித பயங்களுக்கும் நீங்கலாக்கும் (லூக் 1/30)
6. பரிசுத்த ஆவியானவர் என்மேல் வருவாராக. (லூக். 1/35)
7. உன்னதமானவரே! உம் பலம் என்மேல் நிழலிடுவதால் இன்னும் உம் நாமத்திற்காகப் பிரயாசப்படச் செய்யும் (லூக். 1/35)

**56. சாந்தமுள்ளவனாக மாற்றும்.**

1. கர்த்தாவே! பலவானைப் பார்க்கிலும் நீடிய சாந்தமுள்ளவன் உத்தமன் என்று சொன்னீரே! கோபப்படாதவனாக, பொறுமை உள்ளவனாக, பகைக்காதவனாக மாற்றும். - நீதி 16/32.
2. பட்டணத்தைப் பிடிக்கிறவனைப் பார்க்கிலும் தன் மனதை அடக்குகிறவன் உத்தமன் என்றீரே! கோபப்படாதவனாக என் ஆவியை அடக்குபவனாக்கும் - நீதி 10/32
3. உக்கிரம் கொடுமையுள்ளது. கோபம் நிஷ்டூரமுள்ளது என்றீரே!

அதற்கு இடம் கொடாதவனாக மாற்றும் - நீதி 27/4

4. கர்த்தாவே! கோபங்கொண்டாலும் வார்த்தையாலோ, செய னாலோ, கண்களினாலோ பிறரை அவமானப்படுத்தத்தக்க தாகவோ காட்டாதவனாய் என்னை மாற்றும் - எபேசியர் 4/25 28
5. சூரியன் அஸ்தமிக்கும் முன் எரிச்சல் தணியக்கடவது என்றீரே! பகைக்கிற இருதயமுள்ளவனாக மாறும் போது நீர் என்னைவிட்டு விலகுவீர் என்பதை உணரப்பண்ணும்.
6. சகோதரனை நியாயமில்லாமல் கோபித்து வேதனைப் படுத்தாது இருப்பேனாக. - மத் 5/22

**57. உம் கோபத்தை என்னை விட்டகற்றும்**

1. எப்பொழுதும் கடிந்து கொள்ளாதவரே! நீர் கடிந்து கொள்ளும் போது திருந்துபவனாக மாற்றும் - சங் 103/9
2. என்றைக்கும் கோபம் கொண்டிரார் என்று எழுதப்பட்டுள்ளதே என் பாவங்களையெல்லாம் மன்னித்து, மறந்து, விலக்கி, மூடி, சமுத்திரத்தின் ஆழத்தில் தள்ளி உம் கோபத்தை என்னை விட்டு அகற்றிப்போடும். உம் கிருபை என் மேல் பெருகுவதாக. - சங் 103/9
3. கர்த்தாவே! உம்முடைய கோபம், சாத்தானின் கோபம், பொல்லாத துன்மார்க்கரின் கோபம் என்மேல் படாதபடிக்கும் நான் வழியிலே அழியாதபடிக்கும் உம்மை முழுமையாய் நேசித்து ஆராதிப்பவனாக மாற்றும். உம்மை எப்போதும் அண்டிக் கொள்பவனாக மாற்றி எப்போதும் உம் பாக்கியமாகிய சிலாக்கியம் நிறைந்தவனாக மாற்றும் - சங் 2/12

**58. தூதர்களை எமக்கு உதவியாய் அனுப்பும்**

1. கர்த்தாவே! பணிவிடை ஆவிகளை வைத்துள்ளவரே! உம் தூதர்களைக் காற்றுகளாக வைத்துள்ளவரே! எங்கு சென்றாலும் அவைகளை எமக்கு உதவியாக அனுப்பியருளும். - எபி. 1/7,14
2. கர்த்தாவே! எமக்கு தேவதூதர்களைத் தந்தருளும். எப்போதும் அந்த தூதர்கள் எங்கள் விண்ணப்பங்களை உம்மிடம் சேர்த்து பதில்களை உம்மிடமிருந்து கொண்டு வருவார்களாக. - மத். 18/10
3. கர்த்தாவே! என் பாதம் கல்லில் இடறாதபடிக்கு தூதர்களை அனுப்பி கைகளில் ஏந்திக் கொண்டு போகச் செய்யும். - சங். 91/12
4. கர்த்தாவே! பணிவிடை ஆவிகளை அனுப்பி என்னை உமக்கென்று ஊழியம் செய்யத்தக்கதாக பெலப்படுத்தும் - மத் 4/11, லூக் 22/43
5. கர்த்தாவே! உம் தூதர்களைக் கொண்டு சொப்பனத்தில் என்னோடு பேசும் - மத் 1/20
6. கர்த்தாவே! எங்கு சென்றாலும் எங்கள் வழிகளில் எல்லாம் எம்மைக் காக்க காக்கும் தூதர்களை எமக்குத் தந்தருளும். - சங். 91/11

**59. இந்த தூதர்களை அனுப்பும்**

1. கர்த்தாவே! சபைக்குரிய தூதனை எம் சபைக்கு அனுப்பும். அவன் எம் ஆலயத்தைக் காப்பானாக. ஆலயத்துக்கு விரோதமான எல்லாத் தீமைகளையும் அகற்றுவானாக. வெளி 1/20
2. கர்த்தாவே! பெதஸ்தா குளத்திலே உம் சுகமளிக்கும் வல்லமையை வாஞ்சிக்கிறவர்கள் மேல் பாயப்பண்ணின தூதனைப் போல காயங்கட்டும் தூதனை எம் சபைக்கு அனுப்பும் (யோவான் 5/4)
3. இரட்சிப்பை சுதந்தரிக்கப் போகிறவர்கள் நிமித்தமாக ஊழியஞ் செய்யும் உம்முடைய பணிவிடை ஆவிகளை அனுப்பும். எம் சபை மூலமாக செய்யப்படும் எல்லா ஊழியங்களுக்கும் உதவி செய்யும்படி உம் பணிவிடை ஆவிகளை அனுப்பும். (எபி. 1/14)
4. கர்த்தாவே! விசுவாசிகள் வழிகளில் எல்லாம் அவர்களைக் காக்கும் படியாகவும் ஏந்திக் கொண்டு போகும்படியாகவும் தூதர்களை அனுப்பும் (சங். 91/11, 12)
5. கர்த்தாவே! ஆலய வாசலைக் காக்கும்படி கேருபின்களையும், சுடரொளி பட்டயத்தையும் வைத்தருளும். (ஆதி. 3/24)

**60. கர்த்தருடைய தூதனானவராய் வெளிப்படும்.**

1. அவருடைய சமுகத்தின் தூதனானவரே! உமது இரட்சிப்பின் வல்லமைகளை அனுப்பும். ஏசாயா. 63/9
2. 3 பேர் அக்கினியிலே போடப்பட்ட போது 4வது நபராய் வந்து அக்கினி சேதப்படுத்தாது காத்து உலாவச் செய்தவரே! அக்கினி சோதனைகளில் காத்திடும். - தானி 3/25
3. முட்செடி போல பிரகாசமில்லாமல் காணப்படுகின்ற என் வாழ்க்கை ஜொலிக்கத் தக்கதாக கடந்து வாரும். - யாத் 3/2
4. கர்த்தாவே! பள்ளத்தாக்கில் உள்ள மிருது செடிகளுக்குள் நின்றவரே! உம் சபையாகிய தோட்டத்தில் உலாவி எமக்கு நன்மை செய்யும் படியாக வெளிப்படும். - சகரியா 1/8
5. யாக்கோபுக்கு வெளிப்பட்டு அவனை ஆசீர்வதித்தவரே! என்னையும் ஆசீர்வதியும் - ஆதி 32/29
6. கர்த்தாவே! மனோவாவின் மனைவியிடம் பேசும் தேவனாய் வெளிப்பட்டபடியே அடியேனுடனும் பேசும். - நியா 13/3

**61. தனித்து விடப்படாதிருப்பேனாக.**

1. கர்த்தாவே! வனாந்தர நாரைக்கு ஒப்பான சூழ்நிலைகளுக்கு விலக்கும் சங் 102/7
2. கர்த்தாவே! பாழான இடங்களில் தங்கும் ஆந்தையைப் போலான சூழ்நிலைகளுக்கு விலக்கும் - சங் 102/7
3. கர்த்தாவே! நித்திரையில்லாமல் வீட்டின் மேல் தனித்திருக்கும் குருவியைப் போன்ற சூழ்நிலைகளுக்கு என்னை விலக்கும். - சங் 102/7

4. கர்த்தாவே! மனுஷன் தனிமையாய் இருப்பது நல்லதல்ல என்றவரே! தனிமைப்படுகின்ற சூழ்நிலைகளுக்கு அடியேனை விலக்கிக் காத்திடும் மனுஷ ஒத்தாசை, மனுஷர்கள் நேசம், மனுஷ தயவு கிடைப்பதாக. - ஆதி 2/18

5. கர்த்தாவே! ஒண்டியாயிருப்பதிலும் இருவர் கூடியிருப்பது நலம் என்றவரே! கூட்டுப்பிரயாசங்களால் நன்மைகள் உண்டாவதாக. - பிரசங்கி 4/9

6. ஒண்டியாயிருந்து விழுகிறவனுக்கு ஐயோ என்றவரே! ஆபத்து நேரங்களில் ஒருவருக்கொருவர் உதவிடும் நல்ல நண்பர்களை எமக்குத்தாரும் - பிரசங்கி 4/10

## 62. உம் பிள்ளைகளிடத்தில் இவ்வாறு வெளிப்படும்

1. கர்த்தாவே! உம்மால் இரட்சிக்கப்பட்ட உம் பிள்ளைகளுக்குள்ளே நீரே ஞானமருள்பவராக, நீதியருள்பவராக, மீட்பருள்பவராக, பரிசுத்தமருள்பவராகக் கிரியை செய்தருளும் (கொலோ 3/11)

2. கர்த்தாவே! கிரேக்கனென்றோ, யூதனென்றோ, புறஜாதியானென்றோ, புறதேசத்தானென்றோ, ஆண் என்றோ, பெண் என்றோ பாராபட்சம் பாராது ஆத்துமாக்கள் என்ற அடிப்படையில் கண்ணோக்குபவரே! மனந்திரும்பும் என்னை உம் மார்பில் அணைத்து உம் காரியமாய் பயன்படுத்தும். - கொலோ 3/11

3. கர்த்தாவே! நாங்கள் வேண்டிக் கொள்கிறதற்கும், நினைக்கிறதற்கும் அதிகமாக எமக்குள்ளே (உம் பிள்ளைகளுக்குள்ளே) கிரியை செய்யும். நன்மை செய்யும். - எபேசி 3/20

4. கர்த்தாவே! எனக்குள்ளதெல்லாம் உன்னுடையதாயிருக்கிறது என்றவரே! லூக்கா.15/31
உம் பரிபூரணசித்தம் எம் வாழ்வில் நிறைவேறத் தேவையான சகலமும் எமக்குக் கிடைக்கப்பண்ணும். - சங்.24/1

5. உம்முடைய பிள்ளைகளுக்குரிய எல்லாவற்றையும் உம் வல்லமையுள்ள வசனத்தால் தாங்கிக் கொள்ளும். - எபி. 1/3

## 63. அடையாளங்களால் உம் வசனத்தை உறுதிப்படுத்தும்

1. கர்த்தாவே! விக்கிர ஆராதனையை கர்த்தருடைய ஜனங்களின் மத்தியிலே யெரோபெயாம் ஸ்தாபித்தபோது பலிபீடம் வெடிக்கும் என்ற ஒரு அடையாளத்தைச் சொன்னது போல வெடித்ததே! அதைப்போல உமது சத்தியத்துக்குச் சாட்சியாக பெரிய அடையாளங்களை நடப்பியும். (I இரா 12, 13)

2. கர்த்தாவே! இந்த மலையிலே எனக்கு ஆராதனை செய்வீர்கள். நான் உன்னை அனுப்பினேன் என்பதற்கு இதுவே அடையாளம் என்றீரே! கர்த்தருடைய ஆலயமாகிய பர்வதம் பர்வதங்களின்

கொடுமுடியிலே ஸ்தாபிக்கப்படுவதாக. மலையிலே கர்த்தருக்கு ஆராதனை செய்யப்படுவதாக. (யாத்3/12) (ஏசாயா 2) (மீகா4)

3. கர்த்தாவே! பூச்சக்கரத்து மீதெங்கும் வரப்போகின்ற சோதனைக் காலத்திலே மாட்டிக் கொள்ளாதபடி உம் பிள்ளைகளைப் பாதுகாத்து அதை அடையாளமாக்கும். - வெளி 3/10

4. கர்த்தாவே! உம் பிள்ளைகளுக்கு உம் ஞானம், உம் பெலன் ஈந்து பூமியின் சகல ஜனங்களுக்குள்ளும் புகழ்ச்சியும் கீர்த்தியுமாய் வைத்து அதை அடையாளமாக்கும்

## 64. அப்போஸ்தலன் அழைப்பின்படி நிலைநிறுத்தும் கர்த்தாவே,

1. கர்த்தாவே! உலக சிநேகமுள்ள மக்களும், தள்ளப்பட்ட தூதர்களும், உமக்கு விரோதமான மக்களும் பைத்தியமாக, பலவீனராக, கனவீனராக எண்ணினாலும் அதைக்குறித்து கவலையற்றவர்களாக மாற்றும். (Iகொரி 4/10)

2. பசி, தாகம், தங்க இடமில்லாமை, போதுமான ஆடையில்லாமை, குட்டப்படல் போன்ற சோதனைகளை சாத்தான் கொண்டு வந்தாலும் அதன் மத்தியிலும் சந்தோஷமாய் ஆத்தும ஆதாயப் பணி செய்பவர்களாக்கும். (Iகொரி 4/11)

3. வேலைகள் செய்தே ஊழியம் செய்ய வேண்டிய சூழ்நிலை, வையப்படும் சூழ்நிலை, துன்பப்படும் சூழ்நிலை, குப்பை போல மதிக்கப்படும் சூழ்நிலை சாத்தான் கொண்டு வந்தாலும் அதன் மத்தியிலும் உம் ஊழியத்தை நிறைவேற்ற ஜாக்கிரதையுள்ள வனாக்கும். (Iகொரி 4/12, 13)

4. மரணத்துக்குக் குறிக்கப்பட்டவர்கள் போல சாத்தான் எந்நாளும் நெருக்கினாலும் உம் ஜீவனால் மேற்கொண்டு உம் ஜீவனைக் குறித்து அறிவிப்பவர்களாக்கும். (Iகொரி 4/9)

5. எந்நாளும் உம் அடிமையாக, உம் வேலைக்காரனாய் என்னை வைத்திடும் (ரோமர் 1/1)

6. கர்த்தாவே! உம் சுவிசேஷத்திற்காகப் பிரித்தெடுக்கப்பட்டவனாக செயல்படப்பண்ணும். (ரோமர் 1/1)

## 65. இறங்கி வந்து விடுவியும்

1. கர்த்தாவே! நாங்கள் உம்மை ஒருமனதுடனே ஒருமித்து ஓரிடத்தில் கூடித் துதிக்கின்றோம். அடியார்களின் துதிகள் மத்தியிலே இறங்கி வந்து ஒவ்வொருவரையும் அளவில்லாமல் ஆசீர்வதியும். (சங் 22/3)

2. கர்த்தாவே! அக்கினியின் மத்தியில் நாலாவது நபராக இறங்கி வந்து அனனியா, மீஷாவேல், அசரியா என்ற மூவரையும் காப்பாற்றியது போல சாத்தானின் அக்கினி சேதப்படுத்தாது காப்பாற்றும். (தானியேல் 3/25)

3. கர்த்தாவே! இஸ்ரவேலின் ஒளியானவரே! அக்கினியும் அக்கினி ஜுவாலையுமாக இறங்கிவந்து பர்வதங்களை மெழுகு போல உருக்கிப் போடும் (ஏசாயா 10/17) (ஏசாயா 64/2)
4. கர்த்தாவே! மோசேயோடே பேசும்படி முட்செடி மத்தியில் அக்கினி ஜுவாலையில் இறங்கி வந்தீரே! இஸ்ரவேலை எகிப்தியரின் கைக்கு விடுவிக்க இறங்கினேன் என்றவரே! எகிப்தியர் கைகளினின்று விடுவிக்க இறங்கி வாரும் (யாத் 3/1-8)
5. கர்த்தாவே! இஸ்ரவேலின் எக்காளம் மகா ஆரவார முழக்கத்தின் மேல் எரிகோவின் அலங்கத்தை உடைத்தது போல சாத்தான் கோட்டைகளை இடித்திடும் (யோசுவா 6)

**66. கர்த்தாவே! அவனைத் தமது கண்மணிபோலக் காத்தருளினார் என்று எழுதப்பட்டுள்ளதே.**

1. கண்மணி போல காத்திடும் கர்த்தாவே! என்னை உமது கண்மணிபோல நினைத்தருளும். நினைத்தருளி உமது கண்மணியைக் காப்பது போல காத்தருளும் (உபா 32/10)
2. கர்த்தாவே! கண்மணியைப் போல என்னைக் காத்தருளும். கர்த்தாவே! கண்ணின் இமையானது கண்மணியை எவ்வாறு தூசிகளுக்கும் அதிகமான வெளிச்சத்துக்கும் மூடிக் காக்கின்றதோ அதைப்போல என்னை சத்துருவுக்கும் சாத்தானுக்கும் விலக்கி மூடிக்காத்திடும் (சங். 17/8)
3. கர்த்தாவே! உங்களைத் தொடுகிறவன் அவருடைய கண்மணியைத் தொடுகிறான் என்று எழுதப்பட்டுள்ளதே. எம்மை (உம் பிள்ளைகளை) சத்துருவும் சாத்தானும் தொடுகின்ற காரியத்தை உம் கண்மணியைத் தொடுவது போல நீர் எண்ணி யுத்தம் பண்ணிக் காத்திடும் (சகரி. 2/8)

**67. உம் கரம் கிரியை செய்வதாக.**

1. கர்த்தாவே! ஆட்டுக்குட்டிகளாகிய எம்மை புயத்தினால் சேர்த்தருளும். (ஏசாயா 40/11)
2. கர்த்தாவே! எம்மை உமது மடியிலே சுமந்திடும் (ஏசாயா 40/11)
3. கர்த்தாவே! கறவலாடுகளை மெதுவாய் நடத்திடும் (ஏசாயா 40/11)
4. கர்த்தாவே! அமர்ந்த தண்ணீரண்டை நடத்தும். (சங் 23/2)
5. கர்த்தாவே! நீதியின் பாதையிலே நடத்தும் (சங். 23/3)
6. கர்த்தாவே! உமது கோலும் தடியும் தேற்றுவதாக. சங். 23/4
7. கர்த்தாவே! வலது கரமும் உம் பரிசுத்த புயமும் இரட்சிப்பை உண்டாக்குவதாக. சங். 98/1.
8. உம் கரம் எம்மோடு இருப்பதாக. (ஏசாயா 66/14)
9. அநாதி தேவனே! உம்முடைய நித்திய புயங்கள் எமக்கு ஆதாரமாயிருப்பதாக. (உபாகமம் 33/27)
10. உம் கரத்தால் (நித்திய) உமது சத்துருக்களை எமக்கு முன் நின்று துரத்திப்போடும் உபா.33/27.

**68. எழுந்திருக்கப்பண்ணும்**

1. கர்த்தாவே! தூசியை உதறிவிட்டு எழுந்திருக்கப்பண்ணும் (ஏசாயா 52/2)
2. கர்த்தாவே! உம் வல்லமையைத் தரித்து எழும்பப்பண்ணும் (ஏசாயா 52/1)
3. கர்த்தாவே! உம் மகிமையையும் ஒளியையும் பெற்று உமக்கென்று எழும்பிப் பிரகாசிப்பவனாக்கும் (ஏசாயா 60/1)
4. கர்த்தாவே! நித்திரையிருந்து எழுந்து உம்மை வேண்டிக்கொள்பவனாக என்னை மாற்றும் (யோனா 1/6)
5. வியாதிப்படுக்கையினின்று எழுந்து என் படுக்கையை எடுத்துக் கொண்டு போகப்பண்ணும். (மல் 4/1,2)
6. எழுந்து பரமதகப்பனிடம் போய் பாவ அறிக்கை செய்பவனாக்கும் (லூக் 15/18)
7. கர்த்தாவே! உம் புயத்தை பட்டயத்தோடு எழும்பப்பண்ணி வலுசர்ப்பத்தை வதைக்கவும் சமுத்திர வலுசர்ப்பத்தைக் கொன்று போடவும் பண்ணும். (ஏசாயா 51/9)

**69. புறஜாதிகள் மத்தியிலேயும் உயர்த்தும்**

1. கர்த்தாவே! யோசேப்பு குழியில் தள்ளப்பட்டவனாய் காணப்பட்டும், அடிமையாக விற்கப்பட்டும், சகோதரர்களால் வெறுக்கப்பட்டும், சிறையிலடைக்கப்பட்டும், பலவிதமாகச் சோதிக்கப் பட்டாலும் முடிவிலே எகிப்து தேசத்துக்கு அதிகாரியாக பார்வோனால் ஆக்கப்பட்டானே! அதைப்போல உயர்த்தும் (ஆதியா 41/41)
2. கர்த்தாவே! தரியுவின் ராஜ்யபார காலத்திலும், பெர்சியனாகிய கோரேசுடைய ராஜ்யபாரகாலத்திலும் தானியேன் காரியம் ஜெயமாயிருந்ததே! அதைப்போல உமக்கு சித்தமான காரியங்களால் புறஜாதிகள் மத்தியில் ஜெயமெடுக்கப் பண்ணும். (தானி 6/28)
3. சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் பாபிலோன் தேசத்திலே உயர்த்தப்பட்டார்களே! அடியார்களை அந்நிய தேசத்திலும் உயர்த்தும். (தானி 3/30)
4. யூதனாகிய மொர்தெகாய் அகாஸ்வேரு ராஜாவுக்கு இரண்டாவதான வனாய் இருந்ததானே! அதைப்போல உயர்த்தும் (எஸ்தர் 10)
5. ராஜாவின் சொப்பனத்தையும் அதன் அர்த்தத்தையும் தெரிவித்தானே! அதைப்போல வருங்காரியங்களை அறிவிக்கத்தக்க ஞானம் தந்து புறஜாதிகள் முன்பாக உயர்த்தும் (தானி 2)

**70. பரிபூரண சித்தம் என்னில் நிறைவேறுவதாக.**

1. கர்த்தாவே! கர்த்தத்துவத்தைத் தோளின் மேல் உடையவரே! பூலோகத்தில் உள்ள எந்த ஆளுகையோ எந்த அதிகாரமோ

என்னைக் கொண்டுள்ள உம் பரிபூரண சித்தத்தை தடை செய்ய முடியாதபடி காத்திடும் (ஏசாயா 9/6)

2. கர்த்தாவே! ஆலோசனைக்கர்த்தாவே! உம் பரிபூரண சித்தப்படியாய் நல் ஆலோசனைகள் கொடுத்து மேன்மையானதை உமக்குச் செய்ய உதவி செய்யும். (ஏசாயா 9/6)
3. அதிசயமான தேவா! எண்ணி முடியாத அதிசயங்களை நடப்பியும். நடக்காது என்ற காரியத்திலே உம் அதிசயத்தை விளங்கப்பண்ணி அற்புதம் செய்யும். அதிசயத்தக்க ஆச்சரியமான காரியங்கள் செய்யும். (சங். 17/7)
4. வல்லமையுள்ள தேவா! உம் பரிபூரண சித்தத்திற்கு விரோதமாக செயல்படும் மற்ற எல்லா வல்லமைகளையும் அடக்கிப் போடும் (ஆதி 17/1)
5. சமாதான பிரபுவே! சமாதானத்தை நதி போல பாயப்பண்ணி குழப்பத்தின் ஆவிகளையும் தாறுமாறின் ஆவிகளையும் சண்டையின் ஆவிகளையும் துரத்தி உம் பரிபூரண சித்தத்தை நிறைவேற்ற உதவிடும் (ஏசாயா 66/12)
6. பிரபுவே! உம் சித்தம் செய்யத் தேவையான எல்லாத் தேவைகளையும் சந்தித்துத் தாரும். ஆமென். (மத். 6/10)

**71. இவ்வலைகளுக்குள் சிக்காதிருப்பேனாக.**

1. கர்த்தாவே! பிரயாசப்படாமலே பலன் பெறவேண்டும். என்று எண்ணுகின்ற வலைக்குள் சிக்காதிருப்பேனாக. (IIதெச 3/10)
2. லாட்டரி, சுரண்டல் போன்றவைகளால் திடீர் பணக்காரனாகிவிட வேண்டும் என்று எண்ணுகின்ற வலைக்குள் சிக்காதிருப்பேனாக (Iதீ 6/9,10)
3. சுயபிரயாசத்தினால் வருகின்ற நன்மைகளை அற்பமாக எண்ணி மற்றவர்களின் பிரயாசத்தினாலேயே வாழ்ந்துவிடலாம் என்று எண்ணுகின்ற வலைக்குள் சிக்காதிருப்பேனாக. (II தெச 3/8,11)
4. சோம்பல், கனநித்திரை, தூக்கப்பிரியம் போன்ற வலைகளுக்குள் சிக்கிக் கொள்ளாதிருப்பேனாக. (நீதி 6/6-11)
5. இலவசமாக எல்லாம் பெறவேண்டும் என்று எண்ணுகின்ற வலைக்குள் சிக்கிக்கொள்ளாதிருப்பேனாக. (IIதெச 3/8,9)
6. கர்த்தாவே! பொருளாசை காட்டி தங்கள் வலைகளுக்குள் சிக்க வைக்க எண்ணுவோரின் வலைகளுக்குள் சிக்கிக்கொள்ளா திருப்பேனாக. (நீதி 1/10-19)
7. கர்த்தாவே! இருக்கின்றது என்று சொல்பொருளையும் பணத்தையும் வீணாகச் செலவு செய்கின்ற வலைக்குள் சிக்கிக் கொள்ளாதிருப்பேனாக.